

# மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ்

தொகுதி *XIV* – நவம்பர் *2022*

# பகுப்பாய்வு தொடர்புகள்

## ஈக்விஃபாக்ஸ்

கிரண் சமுத்ராலா
தலைவர் – தரவு பகுப்பாய்வு
kiran.samudrala@equifax.com

ஸ்ருதி ஜோஷி
தலைவர் – நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வு
shruti.joshi@equifax.com

வந்தனா பாஞ்சால்
இணை மேலாளர் –நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வு
vandana.panchal@equifax.com

## சிட்பி

சஞ்ஜய் ஜெயின்
தலைமை பொது மேலாளர் – ஈ.ஆர்.டி.ஏ.வி
erdav@sidbi.in

கின்ஸ்வான்முங் ஹாங்க்ஸோ
துணை பொதுமேலாளர், ஈ.ஆர்.டி.ஏ.வி
erdav@sidbi.in

வந்திதா ஸ்ரீவஸ்தவா
துணை மேலாளர் - ஈ.ஆர்.டி.ஏ.வி
erdav@sidbi.in

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிர்வாகச் சுருக்கம் | 04 |
| சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம் | 05 |
| குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம் | 06 |
| விநியோக போக்குகள் | 09 |
| தொழில்துறை இடர் தோற்ற விவரம் | 12 |
| லட்சிய மாவட்டங்கள் | 14 |
| வாடிக்கையாளர் தளத்தில் பகுப்பாய்வு | 16 |
| வினவல் *(Enquiry)* பகுப்பாய்வு | 18 |

# நிர்வாகச் சுருக்கம்

*MFI பல்ஸ் அறிக்கையின் 14வது பதிப்பு, ஜூன் 30, 2022 வரை பணியகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.*

*30 ஜூன் 2022 நிலவரப்படி, 1041 லட்சம் செயலில் உள்ள கடன்கள் மற்றும் 5 கோடி செயலில் உள்ள தனிப்பட்ட கடன் வாங்குபவர்களுடன், மைக்ரோஃபைனான்ஸ் துறையின் போர்ட்ஃபோலியோ ரூ.266,541 கோடியாக உள்ளது, நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவிற்கு வங்கிகள் அதிக பங்களிப்பை வழங்குகின்றன. AMJ' 22 காலாண்டில் வங்கிகள், வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள்-குறுநிதி நிறுவனங்கள் (NBFC-MFI) & சிறுநிதி நிறுவனங்கள் (SFB) நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவிற்கு 90% மற்றும் வழங்கல் தொகைக்கு 89% பங்களிக்கின்றன. ஜூன் 2021 முதல் ஜூன் 2022 வரையிலான காலகட்டத்தில், மைக்ரோஃபைனான்ஸ் தொழில்துறை 20% வளர்ச்சியடைந்தது மற்றும் மார்ச் 2022 முதல் ஜூன் 2022 வரை காலாண்டுக்கு காலாண்டு (Q-o-Q) 1% வளர்ச்சியை கண்டது. NBFCகள் ஜூன் 2021 இலிருந்து ஜூன் 2022 வரை 56% அதிக ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைக் கண்டன.*

*AMJ'21 இலிருந்து AMJ'22 வரை கடன் விநியோகம் மதிப்பின் அடிப்படையில் 116% மற்றும் தொகுப்பில் அடிப்படையில் 92% வருடாந்திர வளர்ச்சியைக் கண்டது. AMJ' 21 முதல் AMJ' 22 வரையிலான காலகட்டத்தில், NBFCகள் வழங்கல் தொகையின் அடிப்படையில் 265% மற்றும் கடன் வழங்கல் எண்ணிக்கை அடிப்படையில் 225% மிக உயர்ந்த வளர்ச்சியைக் கண்டது. ரூ.30000-40000 கடன் அளவு வகையின் கீழ் அதிக எண்ணிக்கையிலான கடன்கள் வழங்கப்பட்டு, AMJ' 21 இலிருந்து AMJ' 22 வரையிலான ஆண்டில் 153% ஆண்டு வளர்ச்சியைக் கண்டது*

*ஜூன் 2021 உடன் ஒப்பிடும்போது ஜூன் 2022 இல் அனைத்து வகை தவணை தவறுதல்களும் குறைந்துவிட்டன. 60-89 நாட்கள் தவறிய தவணைகளை தவிர மற்ற அனைத்து தவறுதல்களும் கடந்த மார்ச் 2022 முதல் ஜூன் 2022 வரையிலான காலகட்டத்தில் குறைந்துள்ளது.*

*30 ஜூன் 2022 நிலுவையில் உள்ள லட்சிய மாவட்டங்களுக்கான போர்ட்ஃபோலியோ ஜூன் 2021 முதல் ஜூன் 2022 வரையிலான காலகட்டத்தில் 29% வளர்ச்சியடைந்து ரூ.37,124 கோடியாக உள்ளது. ஜூலை 2021 முதல் ஜூன் 2022 வரை லட்சிய மாவட்டங்களில் ரூ.41,025 கோடி மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.. ரூ.25000-50000 வரையிலான நிலுவையில் உள்ள கடன் பிரிவில், அதிக எண்ணிக்கையிலான கடன் வாங்குபவர்களை NBFCகளும் அதை தொடர்ந்து சிறு நிதி வங்கிகளும் கொண்டுள்ளன. லாப நோக்கமற்ற MFIக்களை தவிர, 50%க்கும் அதிகமான மற்ற கடன் பெறுனர்கள் ரூ.25000 க்கும் குறைவான நிலுவையில் உள்ள கடன் பிரிவின் கீழ் உள்ளனர் .*

*இந்த பதிப்பில், அட்டவணைப்படுத்தப்பட்ட MFI வினவல் அளவு பகுப்பாய்வை அறிமுகப்படுத்தியுள்ளோம். கோவிட்-19 இன் இரண்டாவது அலைக்குப் பிறகு நுண்நிதித் தொழில் புதிய கடன் வினவல்களில் முன்னேற்றம் கண்டுள்ளது. மார்ச் 21 மற்றும் ஜூன் 22 க்கு இடையிலான காலகட்டத்தில், செப்டம்பர் 2021 மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான கடன் வினவல்கள் இருந்தன. மேலும் ஜூன் 2021 உடன் ஒப்பிடும்போது ஜூன் 2022இல் அதிக வினவல்கள் மேற்கொள்ளப்பட்டன*

# சொல் சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம்

- *ATS (Average Ticket Size) = Disbursed Amount/Number of Loans*
  *(சராசரி கடனின் அளவு) = வினியோகிகப்பட்ட தொகை / கடன்களின் எண்ணிக்கை*

- *DPD = Days Past Due - திருப்பிசெலுத்த வேண்டிய காலம் கடந்த நாட்கள்*

- *Live POS or Borrowers or Active loans = 0 to 179 DPD + New Accounts + Current Accounts*
  *நேரடி நிலுவையில் உள்ள கடன்கள் (அ) கடனாளிகள் (அ) செயலில் உள்ள கடன்கள் = 0 லிருந்து 179 DPD + புதிய கணக்குகள் + நடப்புக் கணக்குகள்*

- *MFI = Microfinance Institution குறுந்தொழில் நிதி நிறுவனம்*

- *POS = Portfolio Outstanding நிலுவையில் உள்ள கடன்களின் போர்ட்ஃபோலியோ*

- *UT = Union Territory யூனியன் பிரதேசம்*

- *Aspirational Districts (AD) - லட்சிய மாவட்டங்கள் -*
  *சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம் மற்றும் நீர் வளங்கள், நிதி சேர்க்கை, திறன் வளர்ச்சி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு போன்ற கூட்டு குறிகாட்டிகளின் அடிப்படையில், மனித மேம்பாட்டு குறியீட்டை மேம்படுத்துவதற்காக ஜனவரி 2018 இல் NITI ஆயோக், இந்திய அரசாங்கத்தால் கண்டறியப்பட்ட மாவட்டங்கள் (தற்போதைய எண்ணிக்கை 117).*

- *1-179 = 1 to 179 DPD/Live POS*
- *1-29 = 1 to 29 DPD/Live POS*
- *30-59 = 30 to 59 DPD/Live POS*
- *60-89 = 60 to 89 DPD/Live POS*
- *90-179 = 90 to 179 DPD/Live POS*
- *30+ நாட்கள் தவணை தவறுதல் (Delinquency) = 30-179 DPD/Live POS*
- *90+ நாட்கள் தவணை தவறுதல் (Delinquency) = 90-179 DPD/Live POS*


- AMJ'21 = ஏப்ரல் 2021 முதல் ஜூன் 2021 வரை
- JAS'21 = ஜூலை 2021 முதல் செப்டம்பர் 2021 வரை
- OND'21 = அக்டோபர் 2021 முதல் டிசம்பர் 2021 வரை
- JFM'22 = ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை
- AMJ'22 = ஏப்ரல் 2022 முதல் ஜூன் 2022 வரை



# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்

# குறுநிதி தொழில்துறையின் சாராம்சம் – ஜூன் 30, 2022 நிலவரப்படி

| ஜூன் 30 2022 - சாராம்சம் | வங்கிகள் | சிறு நிதி வங்கிகள் | என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ | என்.பி.எஃப்.சி | லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | மொத்த தொழில்துறை |
|---|---|---|---|---|---|---|
| தனித்துவ, செயலில் உள்ள கடன் பெற்றவர் ஆயிரத்தில்) | 25,548 | 12,099 | 23,286 | 7,524 | 964 | 69,421 |
| செயலில் உள்ள கடன்கள் (ஆயிரத்தில்) | 38,975 | 16,161 | 39,139 | 8,576 | 1,279 | 104,130 |
| போர்ட்ஃபோலியோ (₹ கோடியில்) | 98,445 | 44,810 | 95,671 | 25,232 | 2,383 | 266,541 |
| வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில் – AMJ' 22 | 20,868 | 9,458 | 21,640 | 5,901 | 266 | 58,133 |
| சராசரி கடன் அளவு (₹) – AMJ' 22 | 37,743 | 45,118 | 38,756 | 44,482 | 44,380 | 39,830 |
| 30+ நாட்கள் தவறிய தவணைகள் (POS) | 7.36% | 5.29% | 3.24% | 2.02% | 2.96% | 4.99% |
| 90+ நாட்கள் தவறிய தவணைகள் (POS) | 2.32% | 1.99% | 1.58% | 0.79% | 1.12% | 1.85% |




- 30 ஜூன் 2022 நிலவரப்படி MFI தொழில்துறையின் கடன் அளவு ₹ 266,541 கோடி
- நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவில் வங்கிகள் 37% சந்தைப் பங்கை பெற்றுள்ளன
- வங்கிகள், NBFC-MFIகள் மற்றும் SFBகள் AMJ '22 காலாண்டில் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவிற்கு 90%ம், கடன் வினியோகத்திற்கு 89 சதவிகிதமும் பங்களிக்கின்றன.
- SFBகள், NBFCகள் மற்றும் லாபத்திற்காக அல்லாத MFIகளின் சராசரி கடன் அளவு தொழில்துறையின் சராசரி கடன் அளவை விட அதிகமாக உள்ளது
- 30+ நாட்கள் மற்றும் 90+ நாட்கள் தவறிய தவணைகள், மொத்த தொழில்துறையுடன் ஒப்பிடும்பொழுது, NBFC-MFIகள், NBFCகள் மற்றும் லாபத்திற்காக அல்லாத MFIகளில் குறைவாக உள்ளது


குறிப்பு: MFI பிரிவில் ~5 கோடி தனிப்பட்ட நேரடி கடன் வாங்குபவர்கள் உள்ளனர். வாடிக்கையாளர்கள், SFBகள், வங்கிகள், NBFC-MFIகள், NBFCகள் மற்றும் இலாப நோக்கற்ற MFIகளுடன் பல கடன்பெறுவதன் காரணமாக, தனிப்பட்ட எண்ணிக்கையில் வேறுபாடு ஏற்படுகிறது

# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்

நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ
(₹ கோடியில்)

| கடன் வழங்குனர் வகை | ஜூன்' 21 | செப்' 21 | டிச' 21 | மார்ச்' 22 | ஜூன்' 22 | ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 95,674 | 92,725 | 93,841 | 102,032 | 98,445 | 3% |
| சிறு நிதி வங்கிகள் | 35,345 | 36,863 | 39,675 | 44,134 | 44,810 | 27% |
| என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ | 72,856 | 79,932 | 84,065 | 94,481 | 95,671 | 31% |
| என்.பி.எஃப்.சி | 16,140 | 14,621 | 16,337 | 19,155 | 25,232 | 56% |
| லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | 2,045 | 1,982 | 2,260 | 2,800 | 2,383 | 17% |
| மொத்த தொழில்துறை | 222,060 | 226,123 | 236,178 | 262,602 | 266,541 | 20% |
| காலாண்டுக்கு காலாண்டு வளர்ச்சி விகிதம் % | | 2% | 4% | 11% | 1% | |

**சந்தைப் பங்கு போக்குகள் - கடன் வழங்குபவர் வகையின்படி**




- *ஜூன் 2021 முதல் ஜூன் 2022 வரையிலான காலகட்டத்தில், நுண்நிதித்துறை 20% வளர்ச்சியடைந்தது மற்றும் மார்ச் 2022 முதல் ஜூன் 2022 வரையில், காலாண்டுக்கு காலாண்டு 1% வளர்ச்சியை கண்டது.*
- *NBFCகள் ஜூன் 2021 முதல் ஜூன் 2022 வரையிலான காலகட்டத்தில் ஆண்டுக்கு ஆண்டு 56% வளர்ச்சியைக் கண்டன.*



# வினியோக போக்குகள்


Powering the World with knowledge™

# வினியோகப்போக்குகள் – நிறுவன வாரியாக

வினியோகிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)

| கடன் வழங்குனர் வகை | AMJ' 21 | JAS'21 | OND' 21 | JFM' 22 | AMJ' 22 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 42 | 79 | 70 | 94 | 55 |
| எஸ்.எஃப்.பி | 10 | 36 | 29 | 30 | 21 |
| என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ | 19 | 69 | 65 | 79 | 56 |
| என்.பி.எஃப்.சி | 4 | 9 | 13 | 17 | 13 |
| லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | 1 | 2 | 3 | 4 | 1 |
| மொத்த தொழில்துறை | 76 | 195 | 180 | 224 | 146 |

கடன் வழங்குபவர் வகையின்படி சந்தை பங்கு போக்குகள்




- *COVID-19 இன் இரண்டாவது அலையிலின் பாதிப்பிலிருந்து MFI தொழில்துறை மீண்டு வருகிறது. AMJ'21லிருந்து AMJ'22 வரை வருடாந்தர கடன் விநியோகம் மதிப்பின் அடிப்படையில் 116% மற்றும் தொகுப்பின் அடிப்படையில் 92% வளர்ச்சி கண்டுள்ளது.*
- *AMJ' 21 இலிருந்து AMJ '22 வரை கடன் வழங்கல் மற்றும் விநியோகத் தொகையின் அடிப்படையில் NBFC கள் அதிக வளர்ச்சியைக் கண்டன.*


**பொறுப்புத்துறப்பு**: *உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட புதுப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முந்தைய காலாண்டுகளின் ஆதார தரவு மேம்படுத்தப்பட்டது.*

# தொழில் துறையின் கடன் அளவு போக்குகள்

விநியோகிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில் )

| கடன் அளவு | AMJ' 21 | JAS' 21 | OND' 21 | JFM' 22 | AMJ' 22 | ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி விகிதம் % |
|---|---|---|---|---|---|---|
| 0-10000 | 10 | 18 | 10 | 11 | 6 | -40% |
| 10000-20000 | 7 | 20 | 13 | 16 | 9 | 29% |
| 20000-30000 | 13 | 34 | 25 | 30 | 17 | 31% |
| 30000-40000 | 17 | 48 | 51 | 64 | 43 | 153% |
| 40000-50000 | 11 | 30 | 31 | 39 | 28 | 155% |
| 50000-60000 | 9 | 25 | 24 | 30 | 21 | 133% |
| 60000 மேலாக | 9 | 20 | 26 | 34 | 22 | 144% |
| மொத்தம் | 76 | 195 | 180 | 224 | 146 | 92% |
| காலாண்டுக்கு காலாண்டு விநியோகத்தின் வளர்ச்சி விகிதம் % | - | 157% | -8% | 24% | -35% | - |
| இந்தியாவில் சராசரி கடன் அளவு (₹) | 35,438 | 35,299 | 39,194 | 40,080 | 39,830 | 12% |
| காலாண்டுக்கு காலாண்டு சராசரி கடன் அளவின் வளர்ச்சி விகிதம் % | - | -0.4% | 11% | 2% | -1% | - |

**விநியோகிக்கப்ப ட்ட கடன்களின் எண்ணிக்கை**




- ரூ.30000-40000 வரையிலான கடன் அளவு வகையின் கீழ் அதிக எண்ணிக்கையிலான கடன்கள் வழங்கப்படுகின்றன மற்றும் AMJ '21 முதல் AMJ '22 வரையிலான காலகட்டத்தில் 153% ஆண்டு வளர்ச்சியைக் கண்டது.
- AMJ '21 லிருந்து AMJ '22 வரையிலான காலகட்ட த்தில் சராசரி கடன் அளவுஇ 12% உயர்ந்துள்ளது.

**பொறுப்புத் துறப்பு**: உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட புதுப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முந்தைய காலாண்டுகளின் ஆதார தரவு மேம்படுத்தப்பட்டது.

EQUIFAX

sidbi





# தொழிற்துறை இடர் தோற்ற விவரம்

# கடன் தவணை தவறுதல்களின் போக்குகள்

**1-179** நாட்கள் தவறிய தவணைகள்

| அறிக்கையிடும் காலாண்டு | **1-29** நாட்கள் கடந்தது | **30-59** நாட்கள் கடந்தது | **60-89** நாட்கள் கடந்தது | **90-179** நாட்கள் கடந்தது | **1-179** நாட்கள் கடந்தது |
|---|---|---|---|---|---|
| ஜூன்' 21 | 14.90% | 10.14% | 3.38% | 3.01% | 31.43% |
| செப்' 21 | 8.64% | 5.44% | 1.74% | 2.95% | 18.77% |
| டிச' 21 | 5.03% | 3.19% | 2.14% | 3.44% | 13.80% |
| மார்ச் 22 | 2.93% | 1.71% | 1.12% | 2.43% | 8.19% |
| ஜூன்' 22 | 2.69% | 1.44% | 1.71% | 1.85% | 7.69% |

**காலம் கடந்த நாட்களின் படி தவறிய தவணைகள்**




- *ஜூன் 2021 உடன் ஒப்பிடும்போது ஜூன் 2022 இல் அனைத்து வகையான தவணை தவறுதல்களும் குறைந்துள்ளது.*
- *மார்ச் 2022 முதல் ஜூன் 2022 வரையிலான காலாண்டில், 60-89 நாட்கள் கடந்த தவணை தவறுதல் வகையை தவிர மற்ற அனைத்து தவறுதல்களும் குறைந்துள்ளன,*




# லட்சிய மாவட்டங்கள்

# லட்சிய மாவட்டங்கள் – ஜூன் 2022 – ஓர் கண்ணோட்டம்


| லட்சிய மாவட்டங்களின் வளர்ச்சி விவரங்கள் | ஜூன் 30 2021 | ஜூன் 30 2022 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| தீவிரமாக வாடிக்கையாளர்களை சென்றடைதல் (வாடிக்கையாளர் ஊடுருவல்) (ஆயிரத்தில்) | 8,143 | 9,867 | 21% |
| வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | 30,353* | 41,025** | 35% |
| செயலில் உள்ள கடன்கள் (ஆயிரத்தில்) | 12,730 | 15,031 | 18% |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (₹ கோடி) | 28,737 | 37,124 | 29% |
| 30+ நாட்கள் தவறிய தவணைகள் | 11.80% | 3.98% | - |
| 90+ நாட்கள் தவறிய தவணைகள் | 2.36% | 1.48% | - |

- லட்சிய மாவட்டங்களுக்கான நிலுவையில் இருந்த போர்ட்ஃபோலியோ ஜுன் 2021 ல் இருந்து 29% அதிகரித்து ஜூன் 30 , 2022ல் ரூ. 37,124 கோடி ரூபாயாக இருந்தது
- லட்சிய மாவட்டங்களில், தீவிரமாக வாடிக்கையாளர்களை சென்றடைதலில் ஜூன் 2021 லிருந்து ஜூன் 2022 வரை 21% வளர்ந்துள்ளது.
- ஜூலை 2021 முதல் ஜூன் 2022 வரையிலான ஆண்டில் ரூ.41,025 கோடி மதிப்பிலான கடன்கள் லட்சிய மாவட்டங்களில் வழங்கப்பட்டது
- லட்சிய மாவட்டங்களில் உள்ள மொத்த 30+ and 90+ நாட்கள் தவணை தவறுதல்களை விட, வங்கிகள் மற்றும் சிறு நிதி வங்கிகளின் 30+ மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் அதிகமாக உள்ளது.

ஜூன் 30, 2022 அன்று நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்)





வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) – ஜூலை '21 முதல் ஜூன் '22




வங்கிகள் | எஸ்.எஃப்.பி | என். பி.எஃப்.சி - எம்.எஃப்.ஐ | என்.பி.எஃப்.சி | லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ

30+ மற்றும் 90+ நிலுவையில் உள்ள கடன்களின் தவணை தவறுதல்கள் - கடன் வழங்குபவர் வாரியாக




30+ நாட்கள் தவறுதல்கள் | 90+ நாட்கள் தவறுதல்கள்




குறிப்பு: *ஜூலை 2020 முதல் ஜூன் 2021 வரை வினியோகம் | ** ஜூலை 2021 முதல் ஜூன் 2022 வரை வினியோகம் | நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவின் படி தவணை தவறுதல்கள் கணக்கிடப்பட்டுள்ளது



# வாடிக்கையாளர் தளத்தில் பகுப்பாய்வு

EQUIFAX | Powering the World with knowledge™

# ஜூன் 30, 2022 அன்று நிலுவையில் உள்ள தொகையின் படி செயலில் உள்ள வாடிக்கையாளர்கள்




ரூ.10000 கீழ் நிலுவையில் செயலில் உள்ள கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை

ரூ.10000-ரூ.25000 இடையே நிலுவையில் செயலில் உள்ள கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை

ரூ.25000-ரூ.50000 இடையே நிலுவையில் செயலில் உள்ள கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை

ரூ.50000 மேல் நிலுவையில் உள்ள கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை


- என்.பி.எஃப்.சிக்களும், அதை தொடர்ந்து சிறுநிதி வங்கிகளும் ரூ.25000-ரூ.50000 இடையேயான கடன் நிலுவையில் உள்ள பிரிவில் அதிக கடன் வாங்குபவர்களைக் கொண்டுள்ளன,
- லாப நோக்கு இல்லாத MFI தவிர்த்து மற்ற கடன் வழங்குனர் வகைகளில், 50% க்கும் அதிகமான கடன் பெறுனர்கள் ரூ.25000 அதிகமான நிலுவை தொகை பிரிவில் உள்ளனர்.



# வினவல் பகுப்பாய்வு

Powering the World with knowledge™

# எம்.எஃப்.ஐ களில் கடன்பெறுவதற்கு, குறியிடப்பட்ட வினவல்களின் தொகுப்பு




- *கோவிட்-19 இன் இரண்டாவது அலைக்குப் பிறகு நுண்நிதித் துறை புதிய கடன் வினவல்களில் முன்னேற்றத்தைக் காட்டியது*
- *மார்ச் 2021 மற்றும் ஜூன் 2022 க்கு இடையில் செப்டம்பர் 2021 மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான வினவல்கள் வந்துள்ளன*
- *ஜூன் 2021 உடன் ஒப்பிடும்போது 2022 ஜூன் மாதத்தில் அதிக எண்ணிக்கையில் கடன் பெறும் வினவல்கள் பெறப்பட்டுள்ளன.*

## இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி பற்றி :

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, 1990 இல் பாராளுமன்றத்தின் ஒரு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI), குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன துறையின் நிதி, மேம்பாடு மற்றும் ஒத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான முதன்மை நிதி நிறுவனம் ஆகும். பல ஆண்டுகளாக, சிட்பி அதன் பல்வேறு நிதி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம், சமூகத்தின் பல்வேறு அடுக்குகளில் உள்ள மக்களின் வாழ்க்கையில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பல நம்பகமான நிறுவனங்களுடன் கைகோர்த்து, மொத்த MSME ஸ்பெக்ட்ரம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

விஷன் 2.0 இன் கீழ் SIDBI, ஃபின்டெக் கடன் வழங்கும் பிரிவில் கிரெடிட் டேட்டா நுண்ணறிவுகளுக்கு, மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ் தவிர, எம்எஸ்எம்இ துறையில் தகவல் சமச்சீரற்ற தன்மைக்கு தீர்வு காண, எம்எஸ்எம்இ பல்ஸ், எம்எஸ்எம்இ மற்றும் கிரிசிடெக்ஸின் ஹெல்த் டிராக்கர், எம்எஸ்இ உணர்வுகள் மற்றும் அபிலாஷைகளை அளவிடுவதற்கு, தொழில்துறை கடன் வழங்குபவர்கள் மற்றும் ஃபின்டெக் பல்ஸ் பற்றிய ஒரு விரிவான அறிக்கை, போன்ற பல்வேறு முயற்ச்சிகளை முன்னெடுத்துள்ளது.

## குறுநிதி வெளியில் சிட்பியின் பங்கு :

குறுநிதி நிறுவன இயக்கத்தை ஆதரிப்பதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய குறுநிதி இயக்கத்தை மேம்படுத்துவதில் SIDBI முன்னோடி பங்கு வகித்துள்ளது. வங்கியின் மைக்ரோஃபைனான்ஸின் மூலம் மார்ச் 31, 2022 நிலவரப்படி, ஒட்டுமொத்தமாக ரூ.23,460 கோடியை வினியோகித்து சுமார் 4.83 கோடி ஏழை வாடிக்கையாளர்களுக்கு பயனளித்துள்ளது. MFI களுக்கான கடன் மற்றும் பங்கு ஆதரவு, இந்த நிறுவனங்களுக்கான திறன் மேம்பாட்டு ஆதரவு மற்றும் பெருநிறுவன நிர்வாக கலாச்சாரத்தை உள்ளீர்த்துக்கொள்வது, இணக்க மதிப்பீட்டு கருவிகள் (compliance assessment tools) போன்றவற்றை ஆதரிப்பதன் மூலம் நன்கு பூர்த்தி செய்யப்படுகிறது. குறுநிதி தொழில் துறையை, பலவீனமான தொடக்கத்திலிருந்து ஒரு முழுமையான தொழில் பிரிவுக்கு முன்னேற்றுவதில் உதவியது மட்டுமல்லாது, அதன் இணை MFI களில் 8 பேர், சிறுநிதி வங்கிகளாகவும் (SFBs)/ /யுனிவர்சல் வங்கிகளாகவும் மாற்றியதில் சிட்பி பங்கு வகித்துள்ளது. குறுநிதி வழங்குவதில் (micro lending), சிறு கடன்களை நேரடியாக SIDBI இலிருந்து (கூட்டாண்மை ஏற்பாடுகள் மூலம்), வட்டி விகிதத்தில் சந்தை விகிதங்களை விடக் குறைவாகக் கிடைக்கச் செய்தது ஒரு புதுமையான முயற்சியாகும். இந்த "பிரயாஸ்" என்று பெயரிடப்பட்ட முயற்சியின் கீழ், மிகவும் ஏழ்மையில் உள்ள மைக்ரோ கடன் வாங்குபவர்களுக்கு சிறிய அளவு கடன்களை ரூ. 0.50 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை, கூட்டாண்மை ஏற்பாடு மாதிரியின் கீழ், சந்தை விகிதங்களை விட ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி விகிதங்களுடன் இந்த வங்கி வழங்கி வருகிறது.

## ஈக்விஃபாக்ஸ் பற்றி :

ஈக்விஃபாக்ஸில் (NYSE: EFX) நாங்கள், அறிவு முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறது என்று நம்புகிறோம். உலகளாவிய தரவு, பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப நிறுவனமாக உள்ளதால், நிதி நிறுவனங்கள், நிறுவனங்கள், ஊழியர்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் அதிக நம்பிக்கையுடன் முக்கியமான முடிவுகளை எடுக்க உதவுவதன் மூலம், உலகப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறோம். எங்கள் தனித்துவமான கலவை, வேறுபட்ட தரவு, பகுப்பாய்வு மற்றும் கிளவுட் தொழில்நுட்பம் ஆகியவற்றின் நுண்ணறிவுஆற்றல் மூலம், முடிவுகள் எடுக்கப்பட்டு மக்களை முன்னோக்கி இயக்குகின்றன. அட்லாண்டாவை தலைமையிடமாகக் கொண்டு, உலகம் முழுவதும் 11,000க்கும் மேற்பட்ட ஊழியர்களால் ஆதரிக்கப்பட்டு Equifax செயல்படுகிறது அல்லது வட அமெரிக்கா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 25 நாடுகளில் முதலீடுகள் செய்துள்ளது. மேலும் விவரங்களுக்கு, Equifax.com எனும் வலைதளத்திற்கு வருகை தரவும்.


**கருத்து மறுப்பு**

இந்த மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ் அறிக்கையை (அறிக்கை) ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் லிமிடெட் (ஈக்விஃபாக்ஸ்) தயாரிக்கிறது. அறிக்கையை அணுகி பயன்படுத்துவதன் மூலம் பயனர் அத்தகைய பயன்பாடு இந்த கருத்து மறுப்புக்கு உட்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் ஏற்றுக்கொள்கிறார். இந்த அறிக்கை ஈக்விஃபாக்ஸ் இன் உறுப்பினர்களாக உள்ள குறுநிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட டிசம்பர் 2021 தரவுகளின் தகவல்களை கணிசமான அடிப்படையாகக் கொண்டது. அறிக்கையை தயாரிப்பதில் ஈக்விஃபாக்ஸ் நியாயமான அக்கறை எடுத்துக் கொண்டாலும், குறுநிதி நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தவறான அல்லது குறைவான தகவல்களால் ஏற்படும் துல்லியம், பிழைகள் மற்றும் / அல்லது குறைகளுக்கு ஈக்விஃபாக்ஸ் பொறுப்பேற்காது. மேலும், ஈக்விஃபாக்ஸ் அறிக்கையில் உள்ள தகவல்களின் போதுமான தன்மை அல்லது முழுமையை உறுதிப்படுத்தாது மற்றும்/அல்லது எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் அதன் பொருந்தக்கூடிய தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை அல்லது அறிக்கையின் எந்தவொரு அணுகலுக்கும் அல்லது நம்பகத்தன்மைக்கும் ஈக்விஃபாக்ஸ் பொறுப்பல்ல, மேலும் ஈக்விஃபாக்ஸ் அத்தகைய அனைத்து பொறுப்புகளையும் வெளிப்படையாக மறுக்கிறது. இந்த அறிக்கை எந்தவொரு விண்ணப்பத்தையும், தயாரிப்பையும் நிராகரிப்பது/மறுப்பது அல்லது ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரை அல்ல, அல்லது ஈக்விஃபாக்ஸ் இன் எந்தவொரு பரிந்துரையும் (i) கடன் வழங்கவோ அல்லது கடன் கொடுக்கவோ இல்லை. (ii) சம்பந்தப்பட்ட தனிநபர் / நிறுவனத்துடன் எந்தவொரு நிதி பரிவர்த்தனையிலும் நுழையவோ அல்லது நுழைய கூடாது என்றோ இல்லை. அறிக்கையில் உள்ள தகவல்கள் ஆலோசனையைக் கொண்டிருக்கவில்லை, மேலும் இந்த அறிக்கையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர் அதன் கருத்தில் விவேகமான அனைத்து தேவையான பகுப்பாய்வுகளையும் பயனர் மேற்கொள்ள வேண்டும். அறிக்கையின் பயன்பாடு கடன் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2005, கடன் தகவல் நிறுவன விதிமுறைகள், 2006, கடன் தகவல் நிறுவன விதிகள், 2006 ஆகியவற்றின் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. அறிக்கையின் எந்தப் பகுதியும் முன்ஒப்புதல்கள் இன்றி நகலெடுக்கவோ, புழக்கத்தில் விடவோ, வெளியிடப்படவோ கூடாது.

## தொடர்பு விவரங்கள்


ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ்
பிரைவேட் லிமிடெட்
யூனிட் எண் 931, 3வது தளம், கட்டிட எண் 9,
சாலிட்டைர் கார்பொரேட் பார்க்,
அந்தேரி காட்கோபார் லிங்க் ரோடு,
அந்தேரி (கிழக்கு),
மும்பை - 400 093

கட்டணமில்லா எண்.: 1800 2093247
ecissupport@equifax.com

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி
ஸ்வாவலம்பன் பவன்,
ப்ளாட் எண் சி-11, ‘ஜீ’ ப்ளாக்,
பாந்திரா குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா (கிழக்கு),
மும்பை - 400 051
மஹாராஷ்டிரா

கட்டணமில்லா எண்.: 1800 226753
www.sidbi.in/en




Copyright © 2022, Equifax Inc., Atlanta, Georgia. All rights reserved. Equifax is a registered trademarks of Equifax Inc.